போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும், வனத் துறைக்கும்-முத்தையன் அவர்களுக்கும் வனத்துறை அதிகாரி களுக்கும் தகராறு இருக்கிறது. ஆகவே, தகராறு இருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்தத் தகராறை வைத்து, அங்கே ஒரு கற்பழிப்புச் சம்பவம் நடைபெற்றது என்பதை நான் ஏற்க மறுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வாணியாற்று அணையிலிருந்து பாசனத்திற்கு நீர் விடப் பெறாதது:

திரு. வ. முல்லைவேந்தன்: தலைவர் அவர்களே ''வாணியாறு அணையிலிருந்து முறையாகக் கால்வாய்கள் மூலம் பாசனத் திற்குத் தண்ணீர் விடாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

வழக்கமாக வாணியாறு நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக செப்டம்பர் முதல் தேதியிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும்.

நீர் வழங்கும் விதிகளின்படி குறைந்த பட்சம் 235 மி. க. அடி கொள்ளளவு நீர்த்தேக்கத்தில் இருந்தால், பாசனத்திற்கு செப்டம்பர் 1-ந் தேதி திறக்கப்படும்.

1989 ஆம் ஆண்டு செப்டம்பர் 1-ந் தேதி நீர்மட்ட உயரம் மற்றும் கொள்ளளவு கீழ்க்கண்டவாறு இருந்தது:

நீர்மட்ட உயரம்	29.77 அடி
கொள்ளளவு	115 மி.க. அடி

1989ம் ஆண்டு போதுமான கொள்ளளவு இல்லாததால் நீர் செப்டம்பர் 1-ந் தேதி திறந்து விடப்படவில்லை.

புதிய ஆயக்கட்டுப் பரப்பு 8,550 ஏக்கரில் 1,462 ஏக்கருக்கு மட்டும் நடப்பு ஆண்டில் 25-12-89 அன்று முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

புதிய ஆயக்கட்டுப் பரப்பு 1,462 ஏக்கருக்கு 25-12-89 முதல் நனைப்புகளுக்கு மட்டுமே (For wettings only) கீழ்க்கண்டவாறு தண்ணீர் தரப்பட்டுள்ளது. 25-12-89 அன்று அணையில் 50.85 அடி உயரத்திற்கு நீர் இருந்தது. அணையின் தற்போதைய, அப்போதைய கொள்ளளவு 270 மி.க. அடி.

1990 மே 10]

தண்ணீர் தரப்பட்ட விவரம்:

டிசம்பர்	1989	5 நாட்கள்
சனவரி	1990	8 நாட்கள்
பிப்ரவரி	1990	9 நாட்கள்
மார்ச்	1990	9 நாட்கள்

16-12-89 அன்று நீர்மட்டம் 53.87 அடியாகவும் நீர்த் தேக்கத்தில் நீர் இருப்பு 298 மி.க. அடியாகவும் இருந்தது. 1967 ஏக்கர் பழைய ஆயக்கட்டுப் பரப்புக்கு 16-12-89 முதல் 28-2-91 முடிய தண்ணீர் தொடர்ந்து விடப்பட்டுள்ளது.

திரு. வ. முல்லைவேந்தன்: தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 1967 ஏக்கர் பழைய ஆயக்கட்டுப் பரப்புக்கு 16-12-1989 முதல் 28-2-1990 முடிய தண்ணீர் விடப் பட்டுள்ளது என்றும், புதிய ஆயக்கட்டுப் பரப்பு 1,462 ஏக்கருக்கு மாதத்திற்கு முறையே 5 நாட்கள், 8 நாட்கள், 9 நாட்கள் என்றும் தண்ணீர் விடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புதிய ஆயக்கட்டு பரப்புக்கு நனைப்புக்காக மட்டும் தண்ணீர் விடப்படுகிறது. பழைய ஆயக் கட்டுகளுக்கு வாணியாறு அணையிலிருந்து, வாணியாற்றின் மூலம் ஆலப்புரம் ஏரிக்கு மாதக்கணக்கில் தண்ணீர் விடப்படுவதால் தண்ணீர் வீண்விரயமாவதுடன், பலபேர் தண்ணீரைத் திருடுகிற வாய்ப்பும் இருக்கிறது. ஆனால், புதிய ஆயக்கட்டுகளுக்கு இடது புற கால்வாய் வழியாக தண்ணீர் விட வேண்டுமென்று விதி இருந்தாலும் கூட, அவர்கள் இடதுபுற கால்வாய் வழியாக தண்ணீர் விடுவதில்லை. அதனால் பல பகுதிகள் பாதிக்கப் படுகின்றன. நம்முடைய தலைமைப் பொறியாளரைச் சந்தித்து இடதுபுற கால்வாயின் வழியாக தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டோம். அவர்களும் ஆணை இடுவதாகச் சொல்லி 6,7 மாதங்கள் ஆகியும் தண்ணீர் வரவில்லை. எனவே, முறையாக விட வேண்டிய கால்வாய் வழியாக தண்ணீர் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அந்த கால்வாயில் தண்ணீர் விடுவது என்பது இரண்டாவது பிரச்சினை. முதலில் தண்ணீர் அணையில் இருக்கிறதா என்பது பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். குறைந்த பட்சம் 235 மில்லியன் கன அடி தண்ணீர் அணையில் இருந்தால் தான் செப்டம்பர் 1-ம் தேதி தண்ணீர் விடுவதற்கு அணை திறக்கப்படும். ஆனால் சென்ற ஆண்டு 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி 115 மில்லியன் கன அடி தண்ணீர்தான்

இருந்திருக்கிறது. இருக்கிற தண்ணீரை வைத்து புதிய ஆயக் கட்டு, பழைய ஆயக்கட்டு பரப்புக்கு தண்ணீர் பகிர்ந்து அளிக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டதைப் போல இடதுபுற கால்வாயில் தண்ணீர் விட வேண்டு மென்று அவர்கள் தெரிவித்து இருப்பதும், ஒரு ஏரிக்கு அதிகமாக தண்ணீரை விடுகிறார்கள் என்று கூறியதும், அதிகாரிகளோடு கலந்து பேசி, அவைகள் சட்டத்திற்கு புறம்பானவைகளாக இருந் தால், உடனடியாக அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை.)

திரு.வ.முல்லைவேந்தன்: துணைத்தலைவர் அவர்களே, அணை கட்டப்பட்டு 7,8 ஆண்டுகளாகியும் கூட அதை ரெகுலராக ஒப்படைக்காத காரணத்தால், அதிகாரிகள் தொடர்ந்து இருந்த பழக்கத்தின் காரணமாக முறைகேடாக நடந்து கொண்டிருக் கிறார்கள். தண்ணீரைக் கூட விலைக்கு விற்று விடுகிற நிலையில், இரவு நேரத்தில் தண்ணீர் திறந்து விடுவதாகச் சொல்லி, அவர்களுக்கு வேண்டியவர்களுக்குப் போகிற கால்வாயாக இருந்தால் மதகை அதிகமாக திறந்து தண்ணீர் விடுவதும், அவர்களுக்கு பணம் தராத பகுதியாக இருந்தால், குறைவாக தண்ணீர் விடுவதும் போன்ற நிலைமைகள் இருப்பதோடு, அந்தப் பகுதியில் அணை கட்டப்பட்டு எட்டு ஆண்டுகளாகியும், இன்னும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் 130 ஏக்கர் பரப்பு உள்ள இடத் திற்கு கால்வாய் வெட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்த அணைப் பகுதியை முழுமையாக முடிக்கவேண்டும். வாணியாறு அணையிலிருந்து போகிற கால்வாயில் பீலியாற்று அணைக்கு கால்வாய் வெட்ட வேண்டுமென்ற கோரிக்கை கடந்த பல ஆண்டு களாக அரசின் ஆய்வில் இருக்கிறது. அந்த கால்வாயை வெட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

10–35 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத்தலைவர் அவர்களே, அதிகாரிகள் மீது இவ்வளவு கடுமையான குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுமத்தியிருக்கிறார்கள். இவ்வளவு கடுமையான குற்றச்சாட்டைச் செய்த அதிகாரிகளைப் பற்றி, இதற்கு முன்னால் என்னிடத்திலே சொல்லியிருக்கலாம், எழுதிக் கொடுத்திருக்கலாம். இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுக் கட்டும், 24 மணி நேரத்திலே இந்த அரசு அதுகுறித்து நட வடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது, குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால். கால்வாய்களை வெட்டுவதைப் பற்றிச் சொன்னார்கள். அதையும் இவர்கள் எழுதிக் கொடுத் தால், அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்,